# ஜீவநதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

MARCH 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

மார்ச் 2026 - இதழ் 223

**"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:8)**

**SHARJAH TAMIL CONGREGATION**

**(CSI KANYAKUMARI DIOCESE)**

**P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576**

For private circulation only

# அனுதின மன்னா

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17:17)

| தேதி | நாள் | காலை | மனன வசனம் | அதிகாரம் | மாலை |
|---|---|---|---|---|---|
| 1 | ஞா | மத். 11:25-30 | நான் ... கிடைக்கும் | 11:29 | ஏசா. 1:1-17 |
| 2 | திங் | கலா. 6:1-10 | ஒருவர் ... நிறைவேற்றுங்கள் | 6:2 | லூக். 10:25-37 |
| 3 | செவ் | 2சாமு. 9:1-13 | அப்பொழுது ... என்றான் | 9:3 | 2கொரி. 12:12-26 |
| 4 | புத | சங். 41 | சிறுமைப்பட்டவன் ... விடுவிப்பார் | 41:1 | ரோம. 14:13-21 |
| 5 | வியா | மாற். 15:15-22 | சிரேனே ... பண்ணினார்கள் | 15:21 | ரோம. 12:9-21 |
| 6 | வெள் | மத். 11:25-30 | என் நுகம் ... என்றார் | 11:30 | கலா. 6:1-6 |
| 7 | சனி | 2கொரி. 11:19-33 | இவை ... நெருக்குகிறது | 11:28 | 1யோவா. 4:7-17 |
| 8 | ஞா | ஏசா. 56:1-8 | கர்த்தரை ... என்னப்படும் | 56:6,7 | லூக். 13:22-30 |
| 9 | திங் | ஏசா. 58:11-14 | என ... சொல்லிற்று | 58:13,14 | ரோம. 15:1-7 |
| 10 | செவ் | ஏசா. 56:1-5 | கர்த்தரைச் ... சொல்லானாக | 56:3 | லேவி. 19:33-34 |
| 11 | புத | எரே. 10:1-11 | வானத்தையும் ... சொல்லுங்கள் | 10:11 | கலா. 3:23-29 |
| 12 | வியா | எரே. 29:4-13 | உங்கள் ... கண்டுபிடிப்பீர்கள் | 4:13 | அப். 2:1-13 |
| 13 | வெள் | ஏசா. 59:1-21 | உங்கள் ... மறைக்கிறது | 59:2 | ரோம. 10:5-13 |
| 14 | சனி | ஏசா. 61:1-11 | உங்கள் ... உண்டாகும் | 61:7 | அப். 2:42-46 |
| 15 | ஞா | எபி. 10:19-25 | சபை ... வேண்டும் | 10:25 | தானி. 6:19-28 |
| 16 | திங் | 1கொரி. 3:1-15 | நான் ... விளையச்செய்தார் | 3:6 | லூக். 3:3-9 |
| 17 | செவ் | லூக். 16:1-13 | அநீதியுள்ள ... மெச்சிக்கொண்டான் | 16:8a | யோவா. 1:43-46 |
| 18 | புத | நெகே. 2:11-18 | என் ... திடப்படுத்தினார்கள் | 2:18 | ஏசா. 1:18-31 |
| 19 | வியா | ஆமோ. 5:1-15 | நீங்கள் ... நிலைப்படுத்துங்கள் | 5:15 a | யோவா. 3:1-16 |
| 20 | வெள் | ஆதி. 2:5-15 | தேவனாகிய ... வைத்தார் | 2:15 | யோவா. 4:1-15 |
| 21 | சனி | யோவா. 5:1-10 | அதற்கு ... என்றான் | 5:7 | லூக். 6:27-31 |
| 22 | ஞா | கலா. 6:11-18 | நானோ ... மேன்மைபாராட்டாதிருப்பேனாக | 6:14 a | 1கொரி. 1:12-19 |
| 23 | திங் | ரோம. 5:12-21 | மேலும் ... பெருகிற்று | 5:20 | 1கொரி. 1:21-25 |
| 24 | செவ் | எபே. 1:3-14 | அவருடைய ... உண்டாயிருக்கிறது | 1:7 | மத். 16:24-28 |
| 25 | புத | 1 பேது. 2:18-25 | நாம் ... குணமானீர்கள் | 2:24 | கொலோ. 2:6-15 |
| 26 | வியா | மத். 26:48-54 | இயேசு ... பிடித்தார்கள் | 26:50 | பிலி. 2:1-11 |
| 27 | வெள் | மத். 27:27-33 | போகையில் ... பலவந்தம் பண்ணினார்கள் | 27:32 | 1 பேது. 2:18-25 |
| 28 | சனி | அப். 14:19-28 | சீஷருடைய ... சொன்னார்கள் | 14:22 | மாற். 8:31-38 |
| 29 | ஞா | லூக். 19:36-44 | உனக்கு ... மறைவாயிருக்கிறது | 19:42 | லூக். 19:41-43 |
| 30 | திங் | மத். 21:18-22 | அப்பொழுது ... பட்டுப்போயிற்று | 21:19 | யோவா. 15:1-10 |
| 31 | செவ் | மத். 22:15-33 | அதற்கு ... என்றார் | 22:21 | ஏசா. 53:1-12 |

# சபை ஆயரிடமிருந்து...

அன்பிற்கினிய கிறிஸ்துவின் உடன்பிறப்புகளே,

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக! காலங்கள் மாறினாலும், சூழ்நிலைகள் மாறினாலும், நம்முடைய தேவன் மாறாதவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். **"நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்"** (எபி. 13:8) என்ற வார்த்தை நமக்கு உறுதியையும் ஆறுதலையும் அளிக்கிறது.

ஒரு திருச்சபையாக நாம் வெறும் ஆராதனைக்காக கூடுகிறவர்கள் அல்ல, ஆன்மீகமாக வளர்ந்து, ஒருவருக்கொருவர் ஆதரவாக நிற்க அழைக்கப்பட்ட சமூகமாக இருக்கிறோம். இந்த தவக்காலத்தில், தனிப்பட்ட ஜெப வாழ்க்கையை ஆழப்படுத்துவோம். வேதாகம வாசிப்பை தினசரி பழக்கமாக மாற்றுவோம். குடும்ப ஜெபத்தை உறுதிப்படுத்துவோம். ஆண்டவர் தாமே நம்மையும் நம் குடும்பத்தையும் தொடர்ந்து ஆசிர்வதித்து வழிநடத்துவராக.

நமது திருச்சபையின் 19 ஆவது சபைநாள் விழாவை இம்மாதம் 1 தேதி கொண்டாடுகிறோம் நமது பாசத்திற்கும் மரியாதைக்குமுரிய அன்பு பேராயர் Rt. Rev. Dr. S. Christopher Vijayan, BA, BD, M.Th, D.Min அவர்கள் தலைமையில், U.A.E திருச்சபையின் ஆயர்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது. இவ்வாராதனை திருமுழுக்கு மற்றும் திடப்படுத்துதல் ஆராதனையாகவும் நடைபெற இருக்கின்றது ஆகவே ஒவ்வொருவரும் சபை நாள் ஆராதனையில் தவறாது கலந்து கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதத்தின் 15 ஆம் தேதி ஞாயிறை நாம் பெண்கள் ஞாயிறாக நடத்துகின்றோம். அதற்காக அங்கத்தினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் ஆயத்தப்பட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் இவ்வருட கன்வென்ஷன் கூடுகை இம்மாதம் 23, 24, 25- ஆகிய நாட்களில் நடைபெறயிருக்கிறது. தவக்காலத்தில் நடைபெற இருக்கின்ற இந்தக் கூடுகைகளில் யாவரும் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்ல அன்புடன் அழைக்கின்றேன்.

நமது பிள்ளைகள் கல்வி ஆண்டின் ஆண்டு இறுதித் தேர்வுகளை எழுதி வருகின்றார்கள், இந்த தேர்வு காலங்கள் அன்பு பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாய் இருக்கவும், ஆண்டவர் நல்ல ஞானத்தை கொடுத்து தேர்வுகளை சிறப்பாய் எழுத ஆண்டவரிடத்தில் மன்றாடுவோம். **கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதித்து காத்தருளுவாராக!**

ஜெபத்துடன்,
கிறிஸ்துவின் திருப்பணியில்
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர் மற்றும் குடும்பம்.**

# அருளுரைப்பகுதி

## தாழ்மையின் வழி சிலுவைக்கு முன்னேறுவோம்

அன்பான திருச்சபை மக்களே,

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் தாழ்மையால் நிரம்பியது. அவர் தேவனாக இருந்தும் மனிதராகத் தாழ்ந்து, இறுதியில் சிலுவை மரணத்திற்கும் கீழ்ப்படியினார்.

பிலிப்பியர் 2:8 சொல்கிறது,

“அவர் தம்மைத் தாழ்த்தி, மரணத்திற்கும், சிலுவை மரணத்திற்கும் கீழ்ப்படிந்தார்.”

இது சாதாரண தாழ்மை அல்ல, இது தியாகத் தாழ்மை.

கிறிஸ்துவின் தாழ்மை அவரின் பிறப்பு முதல் சிலுவை வரை வெளிப்பட்டதை நாம் அறிகின்றோம்.

**(a) பிறப்பில் தாழ்மை**

அரசனாக வர வேண்டியவர் மாட்டுத்தொழுவில் பிறந்தார். அவர் ராஜ சிம்மாசனத்தில் அல்ல, எளிய சூழலில் வந்தார்.

**(b) சேவையில் தாழ்மை**

யோவான் 13-ல் அவர் சீஷர்களின் கால்களை கழுவினார். அவர் கற்றுக் கொடுத்தார்:

“உங்களில் பெரியவன் உங்களுக்குச் சேவகனாக இருக்க வேண்டும்.”

**(c) வேதனையில் தாழ்மை**

சிலுவையை சுமந்தார், அவமதிப்பையும், துன்பத்தையும் ஏற்றார்.

புனித ஆகஸ்தீன் கூறுகின்றார்

“தாழ்மை என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் படி, இரண்டாம் படியும் தாழ்மை, மூன்றாம் படியும் தாழ்மை.” அவர் கூறியது: மனிதன் உயர விரும்பினால் முதலில் தாழ வேண்டும்.

மார்ட்டின் லூதர் தன்னுடைய எழுத்துக்களில் கூறுகின்ற பொழுது

“சிலுவைத் தத்துவம் மனிதன் பெருமையை உடைக்கிறது.” அதாவது, சிலுவை நம்முடைய அகம்பாவத்தை உடைத்து, தேவ கிருபையை உணரச் செய்கிறது.

குடும்பங்களில் தாழ்மை வேண்டும். திருச்சபையில் பதவி அல்ல, சேவை மனம் வேண்டும். சமுதாயத்தில் பழிவாங்குதல் அல்ல, மன்னிப்பு உடையவர்களாய் வாழ அழைக்கப்படுகின்றோம்.

“நான் சாந்தமும் தாழ்மையும் உள்ளவன்.” மத்தேயு 11:29
இதுவே இயேசுவின் இதயமாக இருக்கிறது.

**1. தாழ்மையால் உறவு புதுப்பிக்கப்படுகின்றது**

(லூக்கா 15:11–24)

கெட்ட வழியில் சென்ற குமாரன் உணர்வடைந்த பொழுது அவர் தன்னை தகப்பனுக்கு முன்பதாக தாழ்த்திக் கூறின வார்த்தை
“அப்பா, நான் வானத்திற்கும் உம்மிடத்திற்கும் எதிராக பாவஞ்செய்தேன்.”
அந்த தாழ்மையான ஒப்புதல் உறவை மீட்டது. ஏனென்றால் தாழ்மையில்லாமல் மனந்திரும்புதல் இல்லை மனந்திரும்புதலில்லாமல் புது உறவு இல்லை ஆகவே தாழ்மை குணம் உள்ளவர்களாக அழைக்கப்படுகின்றோம்.

**2. தாழ்மையால் தேவனோடு புது உறவு புதுப்பிக்கப்படுகிறது.**

தாவீது பாவம் செய்தார். ஆனால் அவர் தாழ்மையோடு கடவுளிடத்தில் மன்றாடுகின்றார்.
“தாழ்மையான இருதயத்தை நீர் இகழமாட்டீர்.” சங்கீதம் 51
அவரது தாழ்மையான ஜெபம் தேவனோடு உறவை மீட்டது. நம்மை நாம் தாழ்த்தினால், தேவன் நம்மை உயர்த்துவார். நம்மை நாம் உயர்த்தினால், தேவன் தாழ்த்துவார். ஆகவே தாழ்மை உள்ளவர்களாக அழைக்கப்படுகின்றோம்.

அன்பானவர்களே,

- சிலுவைக்கு செல்லும் பாதை அகம்பாவத்தின் பாதை அல்ல. அது தாழ்மையின் பாதை.
- நாம் இயேசுவைப் போல தாழ்ந்து சேவை செய்யவும் துன்பத்தில் கூட கீழ்ப்படிதலுடன் நிலைக்கவும் தேவனின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் நம்முடைய வாழ்வை அர்ப்பணிப்போம்.
- அப்பொழுது நாமும் உயிர்த்தெழுதலின் மகிமையை அனுபவிப்போம். இறைவன் நம்மை காத்து வழி நடத்துவராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# செயலர் மடல்

*"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபைகுழு சார்பில் திருச்சபையின் விசுவாசிகள் யாவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 2026 ஆண்டில் கர்த்தர் திருச்சபையின் வாயிலாக, கிருபையாய் நம் ஒவ்வொருவரையும் அற்புதமாய் வழிநடத்தி வருகிற தயவுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

நமது திருச்சபையின் பத்தொன்பதாவது சபைநாள் விழா (Church day) இம்மாதம் 1-ஆம் நாள் நமது பாசத்திற்கும் மரியாதைக்குமுரிய நமது பேராயர் Rt.Rev.Dr. S. Christopher Vijayan, BA, BD, M.Th, D.Min - ஐயா அவர்களது தலைமையில், U.A.E திருச்சபையின் ஆயர்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது. இந்த ஆராதனையில் சிலர் ஞானஸ்நானம் (Baptism) பெறவுள்ளார்கள், இன்னும் நமது திருச்சபையின் பிள்ளைகள் மற்றும் பெரியவர்கள் திடப்படுத்துதல் (Confirmation) பெறவுள்ளார்கள். இவர்கள் தங்கள் ஆன்மிக வாழ்வில் ஊன்ற கட்டப்பட, கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நமது திருச்சபையின் இவ்வருட கன்வென்ஷன் (Convention) கூடுகை இம்மாதம் 23, 24, 25- ஆம் நாட்களில் நடைபெறயிருக்கிறது. லெந்து நாட்களில் நடைபெறயிருக்கிற இந்த கூடுகை நம் யாவருடைய வாழ்விலும் ஆன்மீக மீட்சிபெற உகந்ததாக இருக்கும்படி தேவன் கிரியை செய்யவும், செய்தி கொடுக்கயிருக்கிற தேவனுடைய மகனுக்காகவும், இந்த கூடுகைக்கான அனைத்து ஆயத்தங்களுக்காகவும் யாவரும் ஜெபித்துக்கொள்ளுங்கள். அத்தோடு திருச்சபையின் மூலமாக நடைபெறுகிறதான இக்கூடுகையில் யாவரும் பங்குபெற்று தேவநாமத்தை மகிமைப்படுத்தவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சபையின் 19-வது சபைநாளை கொண்டாடுகிற இமமாதத்தில் திருச்சபையின் வாழ்வுக்காக உழைத்த ஆயர்கள் மற்றும் சபைகுழு அங்கத்தினர்கள், திருச்சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருக்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். தொடர்ந்து திருச்சபையின் வாயிலாக நடைபெறுகிற அனைத்து ஊழியங்களிலும் உற்சாகமாய் பங்கேற்போம். தேவனுக்குகந்த சாட்சியாக வாழ்வோம். தேவன் தாமே திருச்சபையின் வாயிலாக நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**சபைக்குழு சார்பில்,**
**K. அருண்குமார் - செயலாளர்.**

# சமூக சீர்திருத்தத்தில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு

**முதல் கோயில் குழந்தை 'ப்ரீனா'வின் மீட்பு**

ஏமி கார்மைக்கேல் அம்மாவின் வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நடந்திருந்தாலும், 1901-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஒரு சம்பவம் டோனாவூர் ஊழியத்தின் எதிர்காலத்தையே மாற்றியமைத்தது. அதுதான் 'ப்ரீனா' (Preena) என்ற ஏழு வயதுச் சிறுமியின் மீட்பு. இந்தச் சம்பவமே பிற்காலத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகளை மீட்கும் 'டோனாவூர் பெல்லோஷிப்' உருவாகக் காரணமாக அமைந்தது.

**ப்ரீனாவின் பின்னணி**

ப்ரீனா உயர்ந்த சாதியைச் சேர்ந்த ஒரு சிறுமி. ஆனால், குடும்பச் சூழ்நிலை காரணமாகவும், சில நேர்த்திக்கடன்களாலும் அவள் கோவிலுக்கு "தேவதாசி" முறைக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தாள். அவளுடைய வீடு 'பெருங்குளம்' (Great Lake) என்ற கிராமத்தில் உள்ள ஒரு கோவில் பெண்ணின் வீடாகும். அங்கு அவளுக்கு நடனமும் பாட்டும் கற்றுத்தரப்பட்டது. ஆனால், அங்கே நிலவும் சூழல் புனிதமானது அல்ல என்பதையும், தனக்குக் காத்திருக்கும் வாழ்க்கை இருளானது என்பதையும் அந்த பிஞ்சு உள்ளம் உணர்ந்திருந்தது.

இதற்கு முன்பே ஒருமுறை ப்ரீனா அங்கிருந்து தப்பித்துத் தன் தாயிடம் ஓடினாள். ஆனால், கோவில் பெண்கள் அவளைத் தேடிச் சென்றுவிட்டனர். அவளுடைய தாய், தன் குழந்தையைத் தற்காத்துக் கொள்ள முடியாமல், கோவில் பெண்களிடமே அவளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். மீண்டும் தப்பிச் செல்லக்கூடாது என்பதற்காக, தண்டனையாக ப்ரீனாவின் பிஞ்சு கைகளில் சூடு (Branding with hot irons) போடப்பட்டது.

**தப்பித்தல் மற்றும் அடைக்கலம் (மார்ச் 6, 1901)**

1901-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி மாலை, ப்ரீனா மீண்டும் துணிச்சலாக அந்த வீட்டிலிருந்து தப்பித்தாள். இருளில், தனியே அந்தச் சிறுமி நடந்து, தண்ணீரைக் கடந்து 'பண்ணைவிளை' (Pannaivilai) என்ற இடத்திற்கு வந்தாள். அங்கு தேவாலயத்திற்கு வெளியே ஒரு கிறிஸ்தவப் பெண் அவளைக் கண்டெடுத்து, இரவில் தன் வீட்டில் தங்க வைத்தார்.

**ஏமி அம்மாவுடனான சந்திப்பு (மார்ச் 7, 1901)**

மறுநாள் காலை, மார்ச் 7-ஆம் தேதி, அந்தப் பெண் ப்ரீனாவை ஏமி அம்மா தங்கியிருந்த பங்களாவிற்குக் கூட்டி வந்தார். அப்போது ஏமி அம்மா தனது காலை நேரத் தேநீரை அருந்திக் கொண்டிருந்தார்.

ப்ரீனா உள்ளே நுழைந்ததும், ஏமி அம்மா அவளைப் பார்த்த விதம் அந்தச் சிறுமியின் பயத்தைப் போக்கியது. ப்ரீனா பிற்காலத்தில் அந்தத் தருணத்தைப் பற்றிக் கூறும்போது, "அம்மா என்னைப் பார்த்ததும், செய்த முதல் காரியம் என்னை அப்படியே தூக்கித் தன் மடியில் வைத்து முத்தமிட்டதுதான். என் சொந்தத் தாய் மட்டுமே அப்படிச் செய்வார். இவர் யார், என்னை என் தாயைப் போலவே முத்தமிடுகிறார்? என்று நான் வியந்தேன். அந்த நாள் முதல் அவர் என் தாயானார்," என்று நினைவு கூர்ந்தார்.

**"பிள்ளை பிடிக்கும் மிஸ்ஸி அம்மாள்"**

ஒரு சுவாரஸ்யமான முரண் என்னவென்றால், கோவில் பெண்கள் ப்ரீனாவை பயமுறுத்துவதற்காக ஏமி அம்மாவைப் பற்றித் தவறாகச் சொல்லியிருந்தார்கள். "நீ ஓடிப்போனால், அந்த வெள்ளைக்காரி உன்னைப் பிடித்துக் கொண்டு போய்விடுவாள். அவள் ஒரு பிள்ளை பிடிக்கும் மிஸ்ஸி அம்மாள் (Child-catching Missie Ammal)" என்று மிரட்டியிருந்தார்கள்.

ஆனால், ப்ரீனா தனது பிஞ்சு மனதிற்குள், "கோவில் பெண்களிடம் சிக்குவதை விட, அந்தப் பிள்ளை பிடிக்கும் அம்மாவிடம் சிக்குவதே மேல். அவரிடம் சென்றால் கோவில் பெண்கள் என்னைப் பிடிக்க முடியாது" என்று எண்ணியே ஏமியிடம் ஓடி வந்தாள். அவளைப் பயமுறுத்துவதற்காகச் சொல்லப்பட்ட பெயரே, அவளைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சேர்த்தது.

**போராட்டம் மற்றும் வெற்றி**

ப்ரீனா வந்து சேர்ந்த சிறிது நேரத்திலேயே, அவளைத் தேடிக் கோவில் பெண்கள் வந்தனர். அவளைத் தங்களுடைய குழந்தை என்று உரிமை கொண்டாடினர். ஆனால் ஏமி அம்மா உறுதியாக நின்றார். "இவள் உங்கள் குழந்தை என்பதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டார்.

அப்போது ப்ரீனா, மிகுந்த தைரியத்தோடு கூட்டத்தின் முன் நின்று, “நான் இவர்களோடு போகமாட்டேன்!” என்று உரக்கச் சொன்னாள். கைகளில் சூடு போடப்பட்ட வடுக்களும், குழந்தையின் மறுப்பும் உண்மையை உணர்த்தின. கோவில் பெண்கள் பின்வாங்கினர்.

**முடிவு**
இந்தச் சம்பவம் ஏமி அம்மாவின் கண்களைத் திறந்தது. “சமயத்தின் பெயரால் பச்சிளம் குழந்தைகள் இருளில் தள்ளப்படுகிறார்கள்” என்ற உண்மையைக் கண்டுகொண்டார். “கடவுளே, இந்தக் குழந்தைகளை மீட்க வேண்டும்” என்று அந்தத் தருணத்தில் அவர் எடுத்த முடிவே, பிற்காலத்தில் டோனாவூர் எனும் மாபெரும் அடைக்கலப் பட்டணம் உருவாகக் காரணமாக அமைந்தது.

ஒரு தனிப்பட்ட சிறுமியின் மீட்பு, ஆயிரக்கணக்கான குழந்தைகளின் வாழ்வு மலர விதை ஊன்றியது.

**மன்னா செல்வகுமார்**
கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்
திருநெல்வேலி.

# ஆண்கள் பகுதி

## “நோவா - குடும்பத்தையும் தலைமுறையையும் காத்த நீதிமான்”

**தியான வசனம் : ஆதியாகமம் 6:9**
“நோவா தன் காலத்தில் நீதிமானும் குற்றமற்றவரும், தேவனோடு நடந்து கொண்டிருந்தவன்.”

1. **தீய சூழலில் நீதியாக வாழ்ந்த மனிதன்**
நோவா வாழ்ந்த காலம் மிகவும் தீமையால் நிரம்பியிருந்தது. ஆதியாகமம் 6:5 சொல்லுகிறது மனிதரின் சிந்தனை தீமையாய் இருந்தது என்று ஆனால் அந்த இருளில் ஒளியாக இருந்தவர் நோவா. இன்றும் உலகம் மாற்றமில்லை ஊழல், பொய், குடும்ப முறிவு, ஆன்மிக அலட்சியம்
ஆனால் தேவன் தேடுவது “பெரும்பான்மை” அல்ல “நீதிமான்” தான்.

**2. கீழ்படிந்த மனிதன்**

கடவுள் நோவாவிடம் பேழை கட்ட சொன்னார். அவர் விவாதிக்கவில்லை. தாமதிக்கவில்லை.

ஆதியாகமம் 6:22 – “தேவன் கட்டளையிட்டபடியே செய்தான்.”

John Calvin கூறும்போது, “நோவாவின் விசுவாசம் கண்களால் காணப்படாததை நம்பிய கீழ்ப்படிதல்” என்கிறார்.

நோவாவிற்கு பேழை கட்ட 100 ஆண்டுகளுக்கும் மேலாக எடுத்திருக்கலாம். மக்கள் நகைத்திருக்கலாம். ஆனால் நோவா கீழ்ப்படிந்தார். உண்மையான ஆண்மை என்பது சத்தமாய் பேசுவது அல்ல, தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிதலகும் .

**3. குடும்ப பொறுப்புள்ள மனிதன்**

நோவாவின் நீதியான வாழ்க்கை அவரை மட்டும் காப்பாற்றவில்லை அவருடைய மனைவி, மகன்கள், மருமகள்கள் எல்லாரையும் காப்பாற்றியது. இன்று ஒரு ஆண் ஜெபிக்கும்போது குடும்பம் பாதுகாப்பில் இருக்கும். விசுவாசமாய் நடக்கும் போது சந்ததி ஆசீர்வாதம் பெறும். அன்புக்குரியவர்களே நோவா உலகத்தை மாற்றவில்லை. ஆனால் அவர் தன் குடும்பத்தை காப்பாற்றினார். அது போதுமானது.

**4. புதிய தொடக்கத்தின் மனிதன்**

வெள்ளத்திற்குப் பிறகு, நோவா முதலில் என்ன செய்தார்? அவர் பலிபீடம் கட்டினார்.

ஆதியாகமம் 8:20 - அவர் தேவனுக்குப் பலி செலுத்தினார்.

அவர் வீடு கட்டவில்லை. அவர் தோட்டம் செய்யவில்லை. முதலில் தேவனைத் தேடினார். ஒரு பக்தி உள்ள ஆண் முதலில் தேவனுக்கு இடம் கொடுப்பார்.

இன்று தேவன் கேட்கிறார்: “இந்த தலைமுறையில் நீதிமான் யார்?”

நாம் சொல்லுவோம்: “கர்த்தாவே, அது நானாக இருக்கட்டும்.”

**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**

**சபை ஆயர்**

# பெண்கள் பகுதி

## பாக்கியம் பெற்ற மகதலேனா மரியாள்

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவரைப் பின்பற்றினவர்கள் ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், சிறியவர்கள் எனப் பலர் இருந்தார்கள், இப்படியாக பலர் இருந்தபோதிலும் இயேசுவோடு கூடவே இருந்து ஊழியம் செய்யும் சிலாக்கியம் எல்லாரும் பெறவில்லை. அதில் சிலர் ஆலயங்களுக்குச் சென்றும், அவர் எங்கெல்லாம் பிரசங்கிக்கச் செல்கிறாரோ அங்கெல்லாம் சென்றும் அவரது போதகத்தைக் கேட்டு அவரைப் பின்பற்றியிருப்பார்கள், சிலர் வீட்டிலே இருந்தும் அவரைப் பின்பற்றியிருப்பார்கள். ஆனால் இயேசுவோடு கூடவே இருந்து, அவருடன் ஊழியத்திலும் இருந்து கொண்டு வாழ்ந்த சில பெண்களின் பெயர்கள் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலரின் பெயர்கள் மகதலேனா மரியாள், யோவன்னாள், சூசன்னாள், கிலெயோப்பா மரியாள், யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமே மற்றும் அநேக ஸ்திரீகளும் அவருடனே கூட ஊழியம் செய்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக் 8 : 1-3 யோ 19 : 25 5 16: 1,2). அவர்களின் ஒருவரான மகதலேனா மரியாளைக் (Mary Magdalene) குறித்து தியானிப்போம்.

**1. நன்றி மறவாதவள்**

அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும் (லூக்கா 8:2)

மகதலேனா மரியாள் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்த நாட்களில் எத்தனை அவஸ்தைப்பட்டிருந்திருப்பாள். மக்களால் தள்ளப்பட்டவளாயும், உற்றார் உறவினரால் கைவிடப்பட்டவளாயும், ஒதுக்கப்பட்டவளாயும் பல அவமானங்களையும், நிந்தைகளையும், ஏச்சுப் பேச்சுகளையும் சுமந்துக் கொண்டு இருந்திருப்பாள்.

இப்படிப்பட்ட வேதனைகளின் ஊடாகக் கடந்து சென்ற மகதலேனா மரியாளைத் தான் இயேசு கிறிஸ்து பிசாசின் பிடியிலிருந்து விடுவித்தார். அதன் பிறகு அவள் அத்தனை வருடங்களாக இழந்துப் போன சந்தோஷத்தையும், விடுதலையையும் மீண்டும் பெற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திலே பங்குள்ளவளாக மாறினாள்.

எனக்கன்பான சகோதரிகளே! நீங்களும் ஒருவேளை எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையிலே, பலவிதமான காரியங்கள் நிமித்தம் கட்டப்பட்ட நிலையிலே இருக்கலாம். எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையே என்று கலங்கித் தவித்துக் கொண்டிருக்கலாம். இயேசு கிறிஸ்து உங்கள் இல்லத்திற்குள், உள்ளத்திற்குள் இருப்பாரானால் நீங்கள் இழந்து போன மகிழ்ச்சியை, இழந்து போன சுகத்தை, இழந்து போன சமாதானத்தை, இழந்து போன வெற்றி வாழ்க்கையை, இழந்துப் போன கிருபைகளை இவ்வுலகில் உங்கள் நன்மைக்கென்றும், தேவ மகிமைக்கென்றும் இருந்து இழந்த எதையும் அவர் அருளுவது நிச்சயம்.

அருமையானவர்களே! அநேக நேரத்தில் நாம் பெற்ற நன்மைகள், ஆசீர்வாதங்கள் ஏன் நிலைப்பதில்லை தெரியுமா? நாம் நன்மையைப் பெற்றவுடனே நன்மை செய்த தேவனை மறந்துவிடுகிறோம். ஆனால் லூக்கா 8: 1-3 வசனங்களைப் படித்தோமானால் மகதலேனா மரியாள் விடுதலைக் கிடைத்தவுடன் இயேசுவை விட்டுப் போய்விடவில்லை. மாறாக இயேசு கிறிஸ்து பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்தபோது அவருடனே கூட மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் ஊழியம் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

நீங்கள் எப்படி? உங்களுக்காக ஜெபித்த ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்கின்றீர்களா? அந்த ஊழியத்தைத் தாங்குகிறவர்களாக, ஊழியருக்குப் பக்கபலமாக இருக்கின்றீர்களா? இப்படி இருப்பது நமக்கு நல்லது மாத்திரமல்ல, நாம் அநேகருக்கு ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக மாறுகிறோம்.

**2. பிறர் துயரத்தில் பங்குக் கொண்டவள்**

இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுக் கொண்டிருந்தார்கள். (யோவான் 19:25)

மகதலேனா மரியாள் கடைசி வரை தனக்கு சுகத்தைக் கொடுத்த இயேசுவோடு கூட இருக்கவேண்டும் என்ற தன்னுடைய தீர்மானத்திலே உறுதியாய் இருந்தபடியினால் தான். மாறாமல் இருந்தபடியினால் தான்

இயேசு கிறிஸ்துவின் கடைசி மூச்சு மட்டும் அதாவது இயேசு சிலுவையில் அறையப்பட்ட அந்தத் துயரமான நேரத்திலும் அந்தத் துக்கத்தைப் பகிர்ந்துக் கொள்ளுகிறவளாக இருந்தாள்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தப் பெண்கள் மிகவும் நெருக்கமாகச் சென்று அவரது கொடிய வேதனைகளைக் கண்களால் கண்டிருப்பார்கள். சிலர் தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு வேதனையோடு சென்றதாக வேதம் கூறுகிறது (லூக்கா 23:48).

எனக்கன்பான சகோதரியே! மற்றவர்களது வேதனையைத் தன் வேதனைப் போன்று எண்ணி, இதயம் நொறுங்கி ஜெபிப்பவர்கள் உண்டு. ஆண்கள் சட்டென்று எதற்கும் கலங்க மாட்டார்கள், கண்ணீர் விட மாட்டார்கள். ஆனால் பெண்கள் மற்றவரது பிரச்சனையை தன் நிலையில் வைத்துப் பார்க்கும் தன்மை அவர்களுக்கு உண்டு. நொறுங்குண்ட இதயத்தைப் பெற்றவர்கள் குறிப்பாக பெண்மணிகளே ஆவர் இயற்கையாகவே பெண்களுக்கு மனதுருக்கமும், நொறுங்குண்ட இதயமும் உண்டு.

ஆனால் சிலர் துக்கத்தில் வாடிக் கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து அச்சச்சோ பாவம் என்று சொல்லி பரிதாபப்பட்டு கடந்துச் சென்று விடுவார்கள். அதிலும் சிலர் அவர்கள் படுகிற வேதனையைப் பார்த்து இது அவர்களுக்குத் தேவைதான் என்று எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுப் போல் பேசி அவர்களுடைய துக்கத்தில் சந்தோஷமடைகிறவர்களும் உண்டு. வேறு சிலர் துக்கத்தில், துயரத்தில், கஷ்டத்தில் வாடிக் கொண்டிருக்கிறவர்களுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்கிறது மாத்திரமல்ல, ஆறுதலான வார்த்தைகளாலும் ஜெபத்தாலும் தாங்குகிறவர்களாக இருப்பார்கள்.

என் அன்பு சகோதரிகளே! நீங்கள் இந்த வரிசையில் எந்த வகையாக இருக்கின்றீர்கள்? தேவன் உங்களைப் பார்த்து மகிழ்கிறாரா அல்லது துக்கமடைகிறாரா?

**3. கர்த்தர் மேல் அன்பு உள்ளவள்**

சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன் (ஏசாயா 66:2) மகதலேனா

மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் அவருக்குச் சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக் கொண்டு வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து (மாற்கு 16:1,2)

நொறுங்குண்ட இதயம் படைத்தவர்களைக் கர்த்தர் எப்போதும் நோக்கிப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். இந்த மகதலேனா மரியாள் தங்களோடு இத்தனை நாட்கள் இருந்த இயேசு கிறிஸ்து இப்போது இல்லை என்று மனம் நொறுங்கினவளாக இருந்திருக்கக்கூடும். சிலுவையில் இயேசு கிறிஸ்து படுகிற பாடுகளைப் பார்த்து வேதனைகளைப் பார்த்து கண்ணீர் வடித்தவளாக, இயேசுவின் மரண செய்தியை ஏற்றுக் கொள்ள முடியாதவளாக, இழந்துப் போன இயேசுவை எண்ணி மிகவும் மனம் உடைந்தவளாக இருந்திருக்கவேண்டும். ஆதலால் தான் இயேசுவின் கல்லறையில் சுகந்த வர்க்கமிடும்படி அதிகாலமே எழுந்து போனதாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கொண்டுச் சென்ற தூபவர்க்கங்கள் அவர்கள் வீடுகளில் இருந்தவைகளல்ல, அவர்கள் வாங்கிச் சென்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அருமையானவர்களே! இயேசுவைப் பார்க்கச் சென்ற அவர்கள், அவர் மேல் வைத்த அன்பினிமித்தம் தங்கள் தூக்கத்தை தியாகம் செய்து, தங்கள் பொருட்களை செலவு செய்து சென்றார்கள். இப்படியான அவர்களுடைய பிரயாசம் வீண்போகவில்லை. உயிர்த்தெழுந்த இயேசுவை முதன் முதலாகப் பார்க்கும் பாக்கியத்தினை மகதலேனா மரியாள் பெற்றாள் (மாற்கு 16: 9). மாத்திரமல்ல இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு ‘வாழ்க’ என்று கூறினார். எவ்வளவு பாக்கியமான வாழ்த்துதல் இது.

வாழ்க என்ற சொல்லின் பொருள்? உலகில் நல்ல சுகமாகவும், சௌக்கியமாகவும். நல்ல ஐசுவரியத்துடனும், எல்லாக் குடும்ப ஆசீர்வாதங்களையும் பெற்று வாழ்வீர்கள் என்பது. நாமும் இயேசுவிற்காக நேரத்தை ஒதுக்கும்போது, அதிகாலையில் எழுந்து ஜெபிக்கும்போது, இயேசுவிற்காக கொடுக்கும் போது, ‘வாழ்க’ என்ற இயேசுவின் வாழ்த்துதலைப் பெற்று பரத்திலிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று வாழ்வோம்.

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள்**

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

**இணை வாக்கியம்:**
அரசன் தாவீதின் பாடல்: 14:1-ல் “தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்”

**பொருள்:**
இறைவனின் நன்மை நிறைந்த பாதங்களைத் தொழ வேண்டும் என்ற அறிவு இல்லாதவன், அதிகமாய் கல்வி கற்றாலும் அந்த கல்வியால் ஒரு பயனும் இல்லை.

தாவர இயல் கல்வியைக் கற்று முனைவராகும் ஒரு மாணவன், விதைகள், செடிகள், பூண்டுகள், மரங்கள் இவைகளின் செயல்பாட்டினை கண்டு அதன் மேல் பெரும் மரியாதை கொள்கிறான். மனித குலத்தை பிழைப்பூட்டும் உணவை அளிக்கும், உயர்ந்த வேலை செய்யும் மரங்களோடு தன்னை மட்டுப்படுத்துகிறான். இறைவன் இல்லை என்று மமதை மனதில் கொண்டால், அவன் எவ்வளவு கற்றாலும் அறிவு அற்றவன். ஏனென்றால் விதைகளை விதைத்து நீர் விடும் வேலை மட்டுமே மனிதன் செய்ய முடியும். அதை உயிர் உள்ளதாக உருவாக்கும் திறன் மனிதனுக்கு இல்லை.

விவிலியத்தின் முதல் நூலின் முதல் அதிகாரம் அந்த தாவரங்கள் தரும் உணவை, மென்று உண்பதற்கு பற்களும், சுரக்கும் உமிழ் நீரும், விழுங்கும் போது இயங்கும் தசைகளும், இரைப்பையில் ஜீரணமாகும் முறையும் குடல்களில் கடத்தப்பட்டு, சத்துக்கள் இரத்தத்தில் சேர்க்கப்பட்டு சக்கை வெளியாகும் விதமும், மனித ஜீரண உறுப்புக்களின் வேலையை எந்த விவசாயி செய்ய முடியும்? அதை செய்த இறைவனின் அறிவை அடையாமல், தாவர இயல் கற்று விஞ்ஞானி ஆனாலும், அந்தக் கல்வியால் பயனில்லை என்கிறார் திருவள்ளுவர்.

நீர், காற்று, கனிமம் இவைகளின் மூலக்கூறுகளையும் இரசாயனக் கலவைகளையும் பிரித்து, ஆற்றல் மிகு செயல்களை அதன் மூலம் செய்தாலும், உலக கல்வித் தரத்தில் உயர் பட்டம் பெற்றாலும், நாம் சுவாசிக்கும் காற்றை உருவாக்கியது மனிதன் அல்ல. காற்று மண்டலம் உருவாக்கப்பட்ட சரித்திரத்தை ஆதி. 1:6-ல் காணலாம். பூமியின் சரித்திரம் ஆதி. 1:1லும் வானத்துகோள்களின் சரித்திரத்தை ஆதி.1:14-18லும் காணலாம். பெருமையாக நடைபோடும் மனிதன் தன் வாழ்வின் ஆதாரமான சுவாசக் காற்றை தனக்குத் தந்தவரை அறிந்து அவருக்கு நன்றி சொல்லி அவருடைய நற்பாதத்தில் பணிய வேண்டும் என்ற அறிவை அடையாவிட்டால் அவனுடைய கல்வி அவனுக்கு பயனற்றதாக இருக்கும். பவுதீகம், வான சாஸ்திரம் போன்ற துறையில் வல்லுநர் பலர் உள்ளனர். ஆயினும், தம் கல்விக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள, பூவுலகையும், வானத்து கோள்களையும் உருவாக்கி இயங்க வைத்தவர் யார்? என்பதை எண்ணும் மனம் இல்லையெனில் அக்கல்வியால் பயனில்லை என்கிறார் தெய்வீகப் புலவர்.

நம்முடைய கல்வியால், பூமி எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சுற்றுகிறது, வேகம் என்ன போன்ற குறிப்புக்களைத் தான் அடைய முடியும். வானத்தையும் பூமியையும் உருவாக்கி இயங்க வைத்த இறைவனின் நல்ல பாதங்களை தொழாமல் அவரால் படைக்கப்பட்ட படைப்புக்களின் அறிவை கல்வியால் அடைந்த இறுமாப்பால் பயனில்லை என்கிறார் திருவள்ளுவர்.

**கருத்து**

கல்வி மிகவும் தேவையானது நல்லதும் ஆகும். அதினால் அறிவு மட்டுமே பெருகும். ஆனால் புத்தி என்பது எல்லா மனிதர்க்கும் ஆதிபகவன் அளித்த அறிவு. எனவே புத்தியும் கல்வியும் மனிதனுக்கு ஈந்த ஆதி பகவனின் நற்பாதங்களை பணியாதவர்கள், கல்வி கற்றாலும் அக்கல்வியால் அவர்களுக்கு பயன் ஏதும் இல்லை.

**Mr. J.D.R Alwin**

# கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

**“துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதல் அடைவார்கள்”**
**மத்தேயு 5:4**

**முகவுரை**

இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் கூறிய பாக்கியவாக்கியங்களில் ஒன்று: “துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதல் அடைவார்கள்.” இந்த உலகத்தின் கணக்குப்படி துயரம் என்பது தோல்வி. ஆனால் தேவனின் ராஜ்யத்தின் கணக்குப்படி துயரம் ஒரு ஆசீர்வாதத்தின் வாசல்.

**“துயரப்படுகிறவர்கள்” – எந்த துயரம்?**

**1. பாவத்திற்காகத் துயரப்படுதல்**

தாவீது ராஜா சங்கீதம் 51-ல் தன் பாவத்திற்காக அழுதார். “என் பாவம் எப்போதும் என் முன் இருக்கிறது” என்று கூறினார். பாவ உணர்வு இல்லாதவன் கடினமான மனம் உடையவன். ஆனால் பாவத்திற்காகக் கண்கலங்குகிறவன் தேவனுக்கு அருகில் இருக்கிறவன். பாவத்தை உணர்ந்து துயரப்படுவது அது கிருபையின் ஆரம்பம்.

**2. உலகத்தின் துன்பத்திற்காகத் துயரப்படுதல்**

இயேசு கிறிஸ்து எருசலேமைப் பார்த்து அழுதார். அவர் லாசரு இறந்தபோது அழுதார்.

அன்பு உள்ளவர்களுக்கு துயரம் இருக்கும். அனுதாபமில்லாத இதயம் கல்லைப் போல இருக்கும். இன்று

- உடைந்த குடும்பங்கள்
- நோயால் தவிக்கும் மக்கள்
- பாவத்தில் சிக்கிய இளைஞர்கள்

இதைக் கண்டு நம் இதயம் துயரப்படுகிறதா?

**3. தேவனுக்காக ஏங்கும் துயரம்**

தவக்காலத்தில் நாம் அனுபவிக்கும் மனந்திரும்பும் வேதனை அது தேவனிடம் திரும்பும் ஆன்மாவின் அழுகை. “கர்த்தாவே, உம்மை இழந்து வாழ்ந்த நாட்கள் வீணாகிவிட்டது” என்று சொல்லும் இதயம் பாக்கியமானது.

**“பாக்கியவான்கள்” எப்படி?**

உலகம் சொல்வது: “சிரிப்பவர்கள் பாக்கியவான்கள்.”
ஆனால் தேவன் சொல்வது: “அழுகிறவர்கள் பாக்கியவான்கள்.”
ஏன்? ஏனெனில் துயரம் நம்மை தேவனிடம் கொண்டு செல்கிறது.
ஒரு குழந்தை விழுந்து அழும்போது, அம்மா ஓடி வந்து அணைக்கிறாள். அதேபோல் நாம் துயரத்தில் அழும்போது, தேவன் நம்மை அணைக்கிறார்.

**“அவர்கள் ஆறுதல் அடைவார்கள்” அந்த ஆறுதல் என்ன?**

**1. பரிசுத்த ஆவியின் ஆறுதல்**

பரிசுத்த ஆவி “ஆறுதல்காரர்” என்று அழைக்கப்படுகிறார். அவர் நம்மோடு நடக்கிறார். நம்முடைய கண்ணீரை காண்கிறார்.
துயரத்தின் நடுவில் நாம் அனுபவிக்கும் அமைதி அது மனிதரால் தர முடியாதது.

**2. மன்னிப்பின் ஆறுதல்**

பாவத்திற்காக அழுதவர்கள் மன்னிப்பு பெற்றபோது உள்ளம் இலகுவாகிறது.
தாவீது சொன்னார்: “என் பாவம் மன்னிக்கப்பட்டது.”
அந்த நிம்மதி அது சொர்க்கத்தின் முன் அனுபவம்.

**3. எதிர்கால நம்பிக்கையின் ஆறுதல்**

இந்த உலகத் துயரம் நிரந்தரமல்ல.
வெளிப்படுத்தல் 21:4ல்: “அவர் அவர்களுடைய கண்களில் உள்ள கண்ணீரை துடைப்பார்.” - இது நித்திய ஆறுதல்.

**சிந்தனை**

1. நான் என் பாவத்திற்காக ஒருபோதும் உண்மையாய் துயரப்பட்டுள்ளேனா?
2. உலகத்தின் துன்பம் என் இதயத்தை தொடுகிறதா?

**By Mrs. P. Johnsy Jebastin**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## "பிறர் மீது கரிசனை"

மனிதர்களில் இரண்டு வகையுண்டு.

**முதல்வகை :** எந்தவொரு காரியத்தையும் செய்ய நேரிடும்போது, "இதனால் எனக்கு என்ன பலன்?" என்று சிந்திப்பவர்கள்.

**இரண்டாம் வகை :** எந்தவொரு காரியத்தையும் செய்ய நேரிடும்போது, "இதனால் சமுதாயத்திற்கு ஏதாவது பலன் உண்டா?" என்று சிந்திப்பவர்கள்.

முதல்வகை

- கடைந்தெடுத்த சுயநலவாதிகள்.
- பூமிக்கும் தங்களுக்கும் பாரமாக இருப்பவர்கள்.
- இந்தப் பூமி வாடகை வீட்டில் இருந்து அதன் எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துவிட்டு, குறைந்தபட்ச வாடகையாக நற்செயல்களையும் செய்யத் தயங்குபவர்கள்.
- மண்ணுலகமாகப் படைக்கப்பட்ட உலகை நரகமாக மாற்ற முயற்சிப்பவர்கள்.

இரண்டாம் வகை

- இந்தப் பூமியின் வாழ்க்கைத் தரத்தை வளப்படுத்துபவர்கள்
- கடவுள் இந்த உலகை மண்ணுலகமாகப் படைத்திருந்தாலும், அதை விண்ணுலகமாக மாற்றும் பொறுப்பு நமக்கு உண்டு என்ற பொறுப்புணர்வு கொண்டிருப்பவர்கள்.
- பிறரன்பே இந்த உலகை இயக்கும் அச்சாணி என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள்.
- நம் வாழ்வின் வளமையும் மகிழ்வும் நாம் பிறருக்குக் கொடுப்பதன் அளவைப் பொறுத்தது என்பதைப் புரிந்து வைத்திருப்பவர்கள்.

**வங்கக்கவி தாகூர் சொன்னது :**
"பிறரைப் பற்றிய அன்பு இல்லாமல் சுயநலமே வாழ்வாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தங்களைத் தாங்களே சாப்பிடுகிற விலங்குகள்."

**திருமறை வசனம் : பிலிப்பியர் 2:4**

"அவனவன் தனக்கானவைகளையல்ல,
பிறருக்கானவைகளையும் நோக்குவானாக."

சுயநலத்தை விட்டு, பிறரின் நலனை எண்ணும் மனம் கிறிஸ்துவின் மனம்

ஜெ.மரிய அந்தோணி

**Compiled by - Mrs P. Johnsy**

# மார்ச் 8... சர்வதேச மகளிர் தினம்!

**முன்னுரை**

உலகம் முழுவதும் மிக உற்சாகமாக, மகிழ்ச்சியாக மகளிர் தினம் கொண்டாடப் படுகிறது. ஒருவகையில் இது மகிழ்ச்சியாக இருந்தாலும், இதன் இன்னொரு கோணத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

1908-ம் ஆண்டு மார்ச் 8-ம் தேதி உழைக்கும் பெண்களின் வேலை நேரத்தைக் குறைக்கவும், கூலியை உயர்த்தவும், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை கோரியும், சுமார் 15,000 உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஒரு பேரணியை நடத்தினர். இந்த நாளை, அடுத்த ஆண்டே தேசிய பெண்கள் தினமாக அமெரிக்க சோஷியலிஸ்ட் கட்சி அறிவித்தது. எனினும், 1975-ம் ஆண்டுதான் மார்ச் 8-ம் தேதியை சர்வதேச பெண்கள் தினமாக ஐ.நா அறிவித்தது. அதைத் தொடர்ந்தே உலக அளவில் இது பரவ ஆரம்பித்தது.

உலகளவில் பெண்கள் சமூக, அரசியல், ஆன்மீக பங்களிப்புகளை அளித்துள்ளனர் கிறிஸ்தவ வரலாற்றிலும் பெண்கள் மிக முக்கியமான பங்கு வகித்துள்ளனர். அவர்கள் விசுவாசத்தின் சாட்சிகளாகவும், தியாகத்தின் முன்மாதிரிகளாகவும், சுவிசேஷப் பணியின் துணைநிலையாளர்களாகவும் இருந்தனர்.

**1. உயிர்த்தெழுதலின் முதல் சாட்சி**

Mary Magdalene, உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதலில் கண்டவர். இதனால், பெண்கள் கிறிஸ்தவ சாட்சியின் முதல் தூதர்களாக உயர்த்தப்பட்டனர்.

**2. சுவிசேஷப் பணியில் பெண்கள்**

Priscilla, Phoebe போன்றோர் திருச்சபையின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினர்.

- பிரிஸ்கில்லா அப்போலோவுக்கு போதித்தார்
- போயிபே ரோமர் 16-ல் “சேவகி” என்று குறிப்பிடப்படுகிறார்.

இது ஆரம்ப கிறிஸ்தவத்தில் பெண்கள் தலைமைப் பங்குகளை வகித்ததை காட்டுகிறது.

**3. தியாகிகளும் மறைசாட்சிகளும்**

Perpetua மற்றும் Felicitas போன்ற பெண்கள், விசுவாசத்திற்காக தங்கள் உயிரை அர்ப்பணித்தனர்.

அவர்களின் தியாகம், பெண்களின் ஆன்மிக தைரியத்தையும் உறுதியையும் உலகுக்கு எடுத்துக்காட்டியது.

**4. கருணை மற்றும் சேவை**

Mother Teresa போன்றோர் ஏழைகள், நோயாளிகள், நிராகரிக்கப்பட்டோருக்காக வாழ்ந்தனர்.

அவர்களின் சேவை கிறிஸ்தவ அன்பின் உயிரோட்டமான சாட்சி.

**5. இன்று பெண்கள்:**

- போதகர்களாக
- ஆராதனை வழிநடத்துநர்களாக
- சுவிசேஷப் பணியாளர்களாக
- சமூக சேவையாளர்களாக

பல துறைகளில் பணியாற்றுகின்றனர்.

பெண்கள் இல்லாமல் திருச்சபையின் வரலாறு முழுமையடையாது.

**நிறைவுரை**

பெண்கள் தினம் என்பது வெறும் சமூக விழா அல்ல, அது கடவுள் பெண்களை உருவாக்கிய உயர்ந்த அழைப்பை நினைவுகூரும் நாள்.

கிறிஸ்தவ வரலாறு காட்டுவது என்னவெனில் பெண்கள் சாட்சிகளாகவும் தலைவர்களாகவும் தியாகிகளாகவும் கருணையின் முகமாகவும் இருந்துள்ளனர்.

“அவள் பலவீனமல்ல, தேவனின் கிருபையில் வலிமையானவள்”.

**Mrs. P.Johnsy**

# திருமறை அறிவுப்போட்டி மார்ச் 2026

## சங்கீதம் 131-140 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 22.03.2026)**

1. எமோரியரின் ராஜா யார்?
2. பாபிலோன் ஆற்றின் நடுவிலிருப்பது எது?
3. கர்த்தர் தமது பண்டசாலைகளிலிருந்து எதை புறப்படப்பண்ணுகிறார்?
4. கர்த்தர் யாரை நோக்கிப் பார்க்கிறார்?
5. பெரிய காரியங்களில் தலையிடாதவன் யார்?
6. பொல்லாதவர்களின் உதடுகளின் கீழிருப்பது எது?
7. கர்த்தர் சீயோனின் ஏழைகளை எதினால் திருப்தியாக்குகிறார்?
8. கர்த்தர் யாருடைய தலைச்சன்களைச் சங்கரித்தார்?
9. எங்கே கர்த்தர் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்?
10. மணலைப் பார்க்கிலும் அதிகமானது எது?

# பிப்ரவரி 2026 - சரியான விடைகள்

## சங்கீதம் 120-130 அதிகாரங்கள்

1. ஜாமக்காரர் (130:6)
2. வேலைக்காரியின் கண்கள் (123:2)
3. ஆகாமியத்தின் கொடுங்கோல் (125:3)
4. கர்த்தருக்கு பயப்படுகிறவனின் மனைவி (128:3)
5. எருசலேம் (122:3)
6. இஸ்ரவேல் (125:5)
7. நிலவு (121:6)
8. சகல அக்கிரமங்கள் (130:8)
9. சீயோனைப் பகைக்கிறவர்கள் (129:6)
10. கர்த்தர் (124:4)

# திருமறை அறிவுப்போட்டி சரியான விடை எழுதியவர்கள்


| | |
|---|---|
| 1 | Mrs. மினு பெர்மின் |
| 2 | Mrs. ஆட்லின் ரீனா |
| 3 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 4 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் |
| 5 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 6 | Mrs. கோல்டா கேத்தரின் |
| 7 | Mrs. ரோஸ்மின் கிருபா டார்வின் |
| 8 | Mrs. ஜேன் மிராக்லின் ஜிஜின் |
| 9 | Mrs. சபிதா அருண் |
| 10 | Mrs. ஆன்லெட் ஜட்சன் |
| 11 | Mrs. திவ்யா சந்திர ஜோஸ் |
| 12 | Mrs. ஜாஸ்மின் வசந்த் |
| 13 | Mrs. ஷெரின் ஜெபா |
| 14 | Mrs. சரசம் |
| 15 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 16 | Mrs. நித்தியா வின்செண்ட் |
| 17 | Mrs. பெனிஷா சிங் |
| 18 | Mrs. விரோனிகா பிரைஸ்லி.J |
| 19 | Mrs. மெர்லின் ஹெர்பர்ட் சுஜின் |
| 20 | Mrs. விஜயலதா |
| 21 | Mrs. அனிலா சதீஷ் |
| 22 | Mrs. ஷாலினி E |
| 23 | Mrs. ஜெப ஷாலு ஜெகன் |
| 24 | Mrs. லாறா சுபின் |
| 25 | Mrs. ஏஞ்ஜெலின் ஜிபில்சிங் |

# குறுக்கெழுத்து புதிர்

## அப்போஸ்தலர் 16 - 20 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 22.03.2026)**

வயது : 13 வயதிற்கு மேல் உள்ளவர்கள்




**மேலிருந்து கீழ்**

1. கோவில்களைச் செய்து தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தவன் யார்?
2. இத்தாலியாவிலிருந்து கொரிந்து பட்டணத்துக்கு வந்தவன் யார்?

**கீழிலிருந்து மேல்**

3. நாளுக்கு நாள் பெருகினது எது?
4. பவுலின் தரிசனத்தில் தங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று பவுலை வேண்டிக்கொண்டவன் யார்?

**வலமிருந்து இடம்**

5. மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தவன் யார்?
6. மார்ஸ் மேடையின் நியாதிபதி யார்?
7. எதில் கட்டுண்டவனாய் பவுல் எருசலேமுக்கு போனான்?

**இடமிருந்து வலம்**

8. அகாயா நாட்டின் அதிபதி யார்?
9. பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் யாருடைய இருதயத்தை திறந்தருளினார்?
10. இயேசுவே கிறிஸ்து என்று பவுல் திருஷ்டாந்தப்படுத்தின இடம் எது?

(குறுக்கெழுத்து புதிர் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் நிரப்பி தரவும்.)

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடைகள் (அப்போ. 11-15)

| மேலிருந்து கீழ் | | கீழிருந்து மேல் | |
|---|---|---|---|
| 1 | யூதர்கள் (13:45) | 4 | கிலவுதியுராயன் (11:28) |
| 2 | பர்சபா (15:22) | 5 | மெர்க்கூரி (14:12) |
| 3 | சங்கீதம் (13:35) | 6 | மோசேயின் ஆகமங்கள் (15:21) |
| **வலமிருந்து இடம்** | | **இடமிருந்து வலம்** | |
| 7 | இருப்புக்கதவு (12:10) | 9 | கிறிஸ்தவர்கள் (11:26) |
| 8 | கூடு (11:5) | 10 | மரியாள் (12:12) |

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடை எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Nisha Stalin | 11 | Sherin Jeba |
| 2 | Anlet Judson | 12 | Sabitha Arun |
| 3 | Jasmine Justin | 13 | Minu Bermin |
| 4 | Gladsily Binukumar | 14 | Benisha Singh |
| 5 | J.J. Jeffin | 15 | Vironica Praislee |
| 6 | Rosemine Kiruba Darwin | 16 | Merlin Herbert Sujin |
| 7 | Jane Miraclin | 17 | Sarasam |
| 8 | J.J. Jafflin | 18 | Anila Satheesh |
| 9 | Pradeepa Rajesh. T. | 19 | Shalini E |
| 10 | Golda Catherene | 20 | Jeba Shalu Jegan |
| | | 21 | Angelin Jibilsingh |

# YOUTH SERMON

## “Grow in Wisdom and Grace”

Dear teenagers

Once again I greet you all in the name of our lord and saviour Jesus Christ.
“Let no one despise your youth, but be an example…” - 1 Timothy 4:12

Youth is not just a time of energy it is a time of foundation building. What you learn today shapes who you become tomorrow.
The Bible encourages growth, not just in age, but in Wisdom, Character, Faith, Responsibility
Even Jesus Christ, as a young boy, learned and grew.
“And Jesus increased in wisdom and stature, and in favor with God and man.” Luke 2:52
If Jesus valued learning, how much more should we?
There is a difference between:
Knowledge – Information in the mind
Wisdom – Right application in life
The Bible says:
“The fear of the Lord is the beginning of wisdom.” – Proverbs 9:10
True learning begins with reverence for God.

Biblical Examples of Young Learners
**1. Daniel**
Daniel was young when taken to Babylon. He learned, Language, Culture, Government system
But he never forgot God.
Learn everything but don’t lose your faith.
**2. Timothy**
Timothy was a young leader trained in Scriptures from childhood.
Paul encouraged him:
Don’t feel inferior because of your age.

Be an example in speech, love, purity, and faith.
Youth can lead when they are grounded in God's Word.
What Should Youth Learn?

**1. Learn God's Word**

The Bible guides decisions, friendships, and future plans.
"Your word is a lamp to my feet..." Psalms 119:105

**2. Learn Discipline**

Success requires effort.
"Whatever you do, do it heartily, as to the Lord." Colossians 3:23

**3. Learn Character**

Character is more important than talent.
The world looks at talent. God look character
Be a Learning Generation
Youth is not a waiting period it is a preparation season.
God is not looking for, Perfect youth, Popular youth.
He is looking for Teachable youth, Faithful youth, Growing youth.

Who so neglects learning in his youth, loses the past and is dead for the future. - Euripides

Let this be your prayer **"Lord, teach me. Shape me. Prepare me."**

**Rev. J.D.R. Jebastin**

# KIDS STORY TIME

## Discipline life

Train up a child in the way he should go." Proverbs 22:6

In a small village, there lived a cheerful boy named joban. Joban was smart and kind, but he had one big problem he did not like following rules. Every morning, his mother would say, "joban , wake up early." But joban would turn around and say, "Five more minutes!"

His teacher would say, "Finish your homework on time." But joban would say, "I'll do it later."

One day, joban's grandfather came to visit. He brought a small plant as a gift.
“Take care of this plant,” Grandpa said. “Water it every day and keep it in the sunlight.”

The first day, joban forgot. The second day, he was busy playing. The third day, the plant looked weak and sad.

Grandpa gently called joban  and asked, “What happened to your plant?”
“I forgot to water it,” joban said softly.

Grandpa smiled kindly and said, “Discipline is like watering a plant. When you do small good things every day, you grow strong and healthy. When you ignore them, you become weak just like this plant.”

Joban felt sorry. From that day on, he made small changes:
• He woke up early.
• He finished homework before playing.
• He helped his mother at home.
• He watered the plant every morning.
After a few weeks, the plant became green and beautiful. And something else changed too joban became more confident and happy.

His teacher praised him. His parents were proud of him. And joban learned a big lesson “Discipline is not about punishment. It is about growing better every day.”

**Moral:** Small daily habits make a big and successful life.

**D.J.Godlin**

# Little Foxes

"All unrighteousness is sin," (I John 5:17).

An explorer led his team into the forests of South Africa fully armed with guns, ammunition and other provisions for the journey. They were thoroughly prepared to counter attacks from wild animals and reptiles. But as they proceeded into the forests, the team was bitten by tiny, almost invisible insects called 'chiggers. This is a tiny flea, which gets in through people's clothes, bites the body and creates troublesome sores. The

explorers were least prepared for such an attack and could not cope with it and therefore had to retreat.

An athlete took a long hiking contest from the west to the east of the country. When asked which was the hardest thing he came across, he said, "It was the sand in my shoes."

The little things, which are often hidden, bring the greatest trouble in our lives. Similarly, the sins, which we may consider 'little' enter our lives and create havoc. Therefore, it is wiser to 'kill the spider before removing the cobweb.'

"Beware of the foxes, the little foxes, that spoil the vine," (Song 2:15).

**D.J . Godlin**

## Life lesson from the Noah's ark

1. Don't miss the boat.
2. Remember that we are all in the same boat.
3. Plan ahead. It wasn't raining when Noah built the ark.
4. Stay fit. When you're sixty years old, someone may ask you to do something really big.
5. Don't listen to critics; just get on with the job that needs to be done.
6. Build your future on high ground.
7. For safety's sake, travel in pairs.
8. Speed isn't always an advantage. The snails were on board with the cheetahs.
9. When you're stressed, float awhile.
10. Remember, the ark was built by
11. No matter the storm, when you are with God, there's always a rainbow waiting.

**Mrs.J. Reji Alwin**


# இறை பிரசன்னத்தில் !

***நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள். லூக்கா 22:46***

- அகில உலக மக்களின் இரட்சிப்பிற்காக.........
- உலக சமாதானத்திற்காக. வன்முறைகள், தீவிரவாதங்கள் ஒழிய........
- உலக திருச்சபைகளுக்காகவும், இந்தியத் திருச்சபைகளுக்காகவும்.....
- தென்னிந்தியத் திருச்சபைக்காகவும், அதில் அனைத்து பேராயர்கள், ஆயர்கள், திருப்பணியாளர்களுக்காகவும்......
- இந்திய தேசத்திற்காகவும், நாம் வாழும் UAE தேசத்திற்காகவும், அதில் தலைவர்களுக்காகவும்..........
- அனைத்து ஊழியங்களுக்காகவும், கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றும் அனைத்து ஊழியர்களுக்காகவும்.......
- ஊழியங்களுக்கு விரோதமாய் செயல்படும் எதிரான வல்லமைகள் அழிக்கப்பட.........
- அனைத்து சிறுவர்கள் வாலிபர்களுக்காகவும், அவர்கள் கல்வி ஆசீர்வதிக்கப்பட.......
- வேலைவாய்ப்பு, திருமணத்திற்காக காத்திருப்போருக்காக.........
- திருமணமாகி புத்திர பாக்கியங்களுக்காய் காத்திருப்போருக்காக, கர்ப்ப ஸ்திரீகளுக்காக ........
- வயோதிபர்கள் பராமரிக்கப்பட.........
- கடன் மற்றும் குடும்ப பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டோருக்காக.......
- மது மற்றும் போதை வஸ்துக்களுக்கு அடிமைப்பட்டிருப்போர் விடுதலையாக்கப்பட.........
- பெண்களுக்கு விரோதமான வன்கொடுமைகள் அழிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட.........
- விதவைகள், கைவிடப்பட்டவர்கள் அனாதைகள், மாற்றுத்திறனாளிகளுக்காக .......
- முகாம்களில் வாழும் அனைத்து அன்பர்களுக்காகவும் அவர்தம் குடும்பங்களுக்காகவும் ...........
- இயற்கையின் நல் பாதுகாப்பிற்காகவும், பராமரிப்பிற்காகவும்............
- நமது திருச்சபைக்காகவும், அதின் ஊழியங்களுக்காகவும், இறைமக்கள் எல்லாருக்காகவும் ...........
- நம்முடைய சபை நாள் நிகழ்வுகளுக்காக, ஆராதனைக்காக மன்றாடுவோம்.
- கர்த்தரின் பரிபூரண சித்தம் இம்மாதம் முழுவதிலும் நிறைவேறிட.........

## சிறுவர் பகுதி...

# COLOUR THE PICTURE



# CHILDREN'S QUIZ CORNER

## (Psalms: Chapters 131-140)

**1. What is it like when God's people live together in unity?**

a. Like the anointing of David
b. Like a stream of running water
c. Like oil poured on Aaron's head
d. Like the snow on Mount Hermon

**2. Upon whom does the exalted Lord look kindly?**

a. The contrite
b. The broken hearted
c. The fatherless and widows
d. The lowly

**3. Who was king of the Amorites?**

a. Adoni-Bezek
b. Jabin
c. Sihon
d. Og

**4. How sharp are the tongues of the wicked?**

a. As a sword
b. As a serpent's
c. As a deceiver's
d. As a spear

**5. What did they hang on the poplars?**

a. Their shields
b. Their harps
c. Their swords
d. Their crowns

**6. What does the Psalmist see himself like?**

a. Like a priest maintaining his purity
b. Like a weaned child with his mother
c. Like grass that has not withered
d. Like dew upon the summer grass

**7. Where does the Psalmist say the Lord will bless you from?**

a. Heaven

b. Zion

c. Jerusalem

d. His throne

**8. What did the Lord do at the Red Sea showing his love endures forever?**

a. Stood up the waters like a wall on the right and left

b. Swept Pharaoh and his army into it

c. Stopped Pharaoh's chariots in the flood

d. Caused great fear to overcome Pharaoh's army

**9. Who does the Psalmist hate?**

a. Those who hate God

b. Those who are trying to destroy him

c. The wicked

d. The bloodthirsty

**10. With what will the Lord clothe the priests of Zion?**

a. Holiness

b. Salvation

c. Righteousness

d. Faithfulness

## Children's Quiz Corner - February 2026 Answers

### Psalms 120-130

| | |
|---|---|
| 1 | Songs of joy (126:5) |
| 2 | The hand of their masters (123:2) |
| 3 | It cannot be shaken (125:1) |
| 4 | Kedar (120:5) |
| 5 | Olive shoots (128:3) |
| 6 | Like a bird from a fowler's snare(124:7) |
| 7 | Cut them free from the cords of the wicked (129:4) |
| 8 | Children born in one's youth (127:4) |
| 9 | The peace of Jerusalem (122:6) |
| 10 | The sun (121:6) |

# சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

## Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | B. Timothy Bermin | 11 | Fabina Jills |
| 2 | Aafreen B. Baron | 12 | Steve Adrian |
| 3 | Aashi B Buena | 13 | Jefna John |
| 4 | J.J. Jafflin | 14 | Berniha Stalin |
| 5 | J.J. Jeffin | 15 | S. Johan |
| 6 | Carlin Jonathan P | | |
| 7 | K. Jovan Fedrick | | |
| 8 | K. Ferona Katie | | |
| 9 | Johan Judson | | |
| 10 | Dallin Bryant | | |

## Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Chris Bermin | 9 | V.M. Nynika |
| 2 | S. Bertina Stalin | 10 | V.M. Arika |
| 3 | R.P. Evalyn Reeba | 11 | Arshit Herbert |
| 4 | Jaran Judson | 12 | Ann Thejas S.A. |
| 5 | C. Jaffrin Hannah | 13 | J.S. Kaariga Jeshal |
| 6 | R.P. Samuel Raj | 14 | Joshan Sujin |
| 7 | Bertina | 15 | Shiona Binara |
| 8 | Sherah | 16 | J.S. Kaariga Jeshal |

# மருத்துவப்பகுதி

## முகவாதம் காரணமும், சிகிச்சையும்

முகவாதம் என்பது உங்கள் முகத்து தசைகளை பாதிக்கும் ஒரு நரம்பு பிரச்சினை. இது முகத்தில் ஒரு பக்கத்தில் உள்ள தசைகளில் பலவீனம் அல்லது பகுதி வாதத்தை உண்டாக்கும். இவ்வாதம் ஏழாவது முக நரம்பில் உள்ள பிரச்சினையால் ஏற்படுகிறது. இது மூளையை முக பாவனையை கட்டுப்படுத்தும் தசைகளுடன் இணைக்கிறது. ஏழாவது முக நரம்பு - சுவை, காது உணர்வையும் பாதிக்கிறது. முகவாதம் (Bell's palsy) இருக்கும்போது இமை சரியாக மூட முடியாமல் போகலாம். புன்னகை செய்தால் இருபக்கமும் சமமற்றதாக ஏற்றத்தாழ்வுகளுடன் தோன்றும். எந்த வயதிலும் ஏற்படலாம் என்றாலும் 15-45 வயதில் அதிகமாக இருபாலருக்கும் காணப்படுகிறது. முகத்தின் ஒரு பக்கத்தில் உள்ள தசைகளை கட்டுப்படுத்தும் நரம்பின் வீக்கம், எரிச்சலால் இது ஏற்படுகிறது. வேறு தசைகளை அசைக்க முயற்சிக்கும் போது சில தசைகள் தன்னிச்சையாக சுருங்கும். (எ.கா) புன்னகைக்கும் போது பாதிக்கப்பட்ட பக்கத்தில் உள்ள கண் மூடிக் கொள்ளலாம்.

**அறிகுறிகள்**

முகவாத அறிகுறிகள் திடீரென தோன்றும் பொதுவாக சிலவாரங்களில் மேம்பட ஆரம்பித்து சுமார் ஆறுமாதங்களில் முழுமையாக குணமடையும். அரிதாக முகவாதம் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை ஏற்படலாம். முகத்தின் ஒரு பக்கத்தில் கண்ணை மூடவில்லை என்பதை கவனிக்க முடியும். தெளிவாக பேசுவதில் சிரமம் இருக்கலாம். முகத்தில் உணர்வை இழக்கலாம். சிறிது முகவலி தோன்றலாம். ஒரு கண்ணை மூடச் சிரமப்படுவதால் கண் வறட்சியை ஏற்படுத்தும் பெரும்பாலும் இந்த அறிகுறிகள் முகத்தில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தும். கண்கள் உலர்ந்து போகலாம். மங்கலான பார்வை இருக்கலாம் ஒரு கண் முழுமையாக மூட முடியாமல் போகும்போது எரிச்சலாக உணரலாம். முன்பு போல உணவின் சுவையை உணர முடியாமல் போகலாம். மேலும் காது கேட்பதில் ஒலிக்கு அதிகரித்த உணர்திறன் ஏற்படலாம் வாயில் எச்சில் வடியும். இது தவிர தாடையைச் சுற்றிவலி அல்லது பாதிக்கப்பட்ட பக்கத்தின் காதுக்குள் அல்லது பின்னால் வலி தோன்றும். அறிகுறிகள்

ஒவ்வொரு நபருக்கம் வேறுபடும். லேசான முதல் கடுமையான வரை வலி இருக்கலாம். முகவாதம் உள்ளவர்கள் பொதுவாக சில வாரங்கள் முதல் ஆறுமாதங்களுக்குள் முக அமைப்பு ஓரளவு அல்லது முழுவதுமாக மீண்டும் பெறுகின்றனர். சில நேரங்களில் முக பலவீனம் நீண்ட காலத்திற்கு நீடிக்கலாம் அல்லது நிரந்தரமாக இருக்கலாம்.

**காரணங்கள்**

இது பொதுவாக வைரசால் ஏற்படும் எதிர்வினையால் ஏற்படலாம். மேலும் எதிர்ப்பு தன்மை பிரச்சினைகள், முகத்திற்கு செல்லும் 7ஆவது நரம்புக்கான இரத்த ஓட்ட குறைபாடும் ஆகும். முகவாதத்திற்கான சாத்தியமான தூண்டுதல், ஏற்கெனவே உள்ள வைரஸ் தொற்று எ.கா. சின்னம்மை, ஹெர்பிஸ் சிம்லஸ் மற்றும் மன அழுத்தம், தூக்கமின்மை, உடல் காயம், சிறிய உடல் நலக்குறைவு, முக நரம்பியல் தொற்று, அதனால் ஏற்படும் சுழற்சி, நரம்பு இழைகளை பாதுகாக்கும் உறை சேதம் முதலியன ஆகும்.

முகவாதம் கருவுற்றபின் கடைசி மூன்று மாதத்தில் அல்லது குழந்தை பிறந்த முதல் வாரத்தில் இருப்பவர்கள் மற்றும் நீர் கோர்வை, புளூ காய்ச்சல், நீரிழிவு, மிகை இரத்த அழுத்தம்,உடல் பருமன், மன அழுத்தம் உள்ளவர்களுக்கும் இது மிகையாக தோன்றுகிறது.

**சிக்கல்கள்**

பொதுவாக முகவாத அறிகுறிகள் மறைந்துவிடும் என்றாலும் சில சிக்கல்கள் தோன்றுகின்றன. கண் மூடமுடியாததால் ஏற்படும் பகுதி அல்லது முழு பார்வை இழப்பு உண்டாகிறது. இது கார்னியா என்று அழைக்கப்படும் கண்ணின் நிறமிழி உறையில் அதிகப்படியான உலர்வு கீறல்களால் ஏற்படுகிறது. சில சமயம் முக நரம்புக்கு திரும்ப சரிசெய்ய முடியாத சேதம், நரம்பு நார்கள் சீரற்ற முறையில் வளர்வது. இதனால் புன்னகைக்கும் போது பாதிக்கப்பட்ட பக்கத்தில் உள்ள கண் மூடிக் கொள்ளலாம்.

**முகவாதத்தில் உளவியல் தாக்கம்**

பல மருத்துவப் பயனாளிகளுக்கு குறிப்பாக வாலிபர்களுக்கு விடலை பருவத்தினருக்கு தெரியக்கூடிய மாற்றங்கள்: சமூக மற்றும் உணர்ச்சி மாற்றங்களை உருவாக்கலாம். சிரிப்பது, பொது வெளியில் சாப்பிடுவது

அல்லது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில் பங்கேற்பது போன்ற அன்றாட பணிகள் அச்சுறுத்தலாகத் தோன்றலாம்.

இவர்களுக்கு முகத்தோற்றம் மற்றும் பேசுவதில் தடங்கள் போன்ற மாற்றங்களால் பதற்றம் மன சோர்வு ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளது.

பெரும்பாலான முகவாத மருத்துவப் பயனாளிகள் 72 மணி நேரத்திற்குள் உச்சகட்ட அறிகுறிகளை அனுபவிக்கிறார் இந்த வேகமான முன்னேற்றம் தான் வாரங்கள் அல்லது மாதங்களாக படிப்படியாக முகபலவீனத்தை ஏற்படுத்தும். இது மற்ற நோய்களில் இருந்து இதை வேறுபடுத்திக் காட்டுகிறது (எ.கா) பக்கவாதம் (Stroke). இதை முகவாதத்திலிருந்து வேறுபடுத்தி அறிவது முக்கியமாகும்.

முகவாதம் 7ஆவது நரம்பை மட்டுமே பாதிக்கிறது. ஆனால், பக்கவாதம் மூளைத்திசுவைப் பாதிக்கிறது. ஆகவே, கைகால் பலவீனம் தோன்றும் முகமேல்பகுதி பாதிக்கப்பட்டிருப்பின் நெற்றியை சுருக்க முடியாது, பேச்சு குழறும் திடீரென தலைவலி தோன்றும், ஆனால் முகவாதத்தில் நெற்றியை சுருக்க முடியும், பேச்சில் குழறுபடி இராது.

**சோதனை**

முகவாதத்தை உறுதிசெய்ய எந்த இரத்த சோதனையும் உதவாது. அதற்கு பதிலாக மருத்துவர் ஒரு மருத்துவப் பயனாளியை சோதித்து மேல் மற்றும் கீழ் முக பலவீனத்தின் அறிகுறிகளை மதிப்பிடுகிறார். மூளை வரைபடம், நரம்பு கடத்தல் ஆய்வு சில சமயங்களில் நோயை உறுதிப்படுத்த அல்லது நிலைமைகளை முகவாதத்திலிருந்து வேறுபடுத்தி அறிய உதவும். முக பலவீனம் படிப்படியாக அதிகரித்தால் அல்லது முக உணர்ச்சி. சுவை, கேட்கும் திறன் ஆகியவைகளில் பாதிப்பு இருந்தால் எம்.ஆர்.அய்.சிடி ஸ்கேன் பயனுள்ளதாக இருக்கும்.

**மருத்துவம்**

முகவாதத்திற்கு நேரடியாக எந்த மருத்துவமும் இல்லை எனினும் முகவாதம் என்று கண்டறியப்பட்டவுடன் மருத்துவர் அதிக அளவு

பிரினிசோலோன் மற்றும் வைரஸ் எதிர்ப்பு மருந்துகளையும் பொதுவாக மருத்துவப் பயனாளிகளுக்கு அளிப்பார்கள்.

**இயன் மருத்துவம்**

முகவாதம் சிகிச்சையில் இயன் மருத்துவம் (பிசியோதெரபி) மிக முக்கியமானது. இது தசை வலிமையை மீட்டெடுக்கவும், முகத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவரவும் உதவுகிறது. முக தசைகளைத் தூண்டும் பயிற்சிகள், மசாஜ் மற்றும் வெப்ப சிகிச்சை (Heat Therapy) மூலம் உதடு கோணல், கண்மூடாமை போன்ற பிரச்சினைகளை சரி செய்யலாம். ஆரம்பக் கட்ட சிகிச்சையுடன் இயன் மருத்துவம் செய்வது விரைவாக குணமாக வழி வகிக்கும்.

**பயிற்சிகள்**

தசைகளை தூண்டுதல்: முகதசைகளை லேசாக மசாஜ் செய்வது இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி தசை பலவீனத்தைக் குறைக்கிறது.
கண்னை இறுக்கமாக மூடுதல், புருவங்களை உயர்த்துதல், சிரித்தல் உதடுகளைக் குவித்து ஊதுதல் மற்றும் கன்னங்களை உப்பச் செய்தல் போன்ற பயிற்சிகள் செய்யப்பட வேண்டும்.

**வெட்ப சிகிச்சை:** தசை இறுக்கத்தைக் குறைக்க பாதிக்கப்பட்ட பகுதிகள் லேசான வெப்பம் அல்லது ஈரமான வெப்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.
மின்தூண்டுதல் (Electrical Stimulation) தசை செயல்பாட்டைத் தூண்ட மின் தூண்டுதல் சிகிச்சையைப் பயன்படுத்தலாம்.

**முக்கிய குறிப்பு**

அறிகுறிகள் தோன்றிய உடனே இயன் மருத்துவ சிகிச்சையைத் தொடங்குவது சிறந்தது. பயிற்சியை தொடர்ந்து செய்வதன் மூலம் முக தசைகளின் தொனி பராமரிக்கப்படுகிறது.

இக்குளிர்காலத்தில் முகவாதம் அதிக விழுக்காட்டில் தோன்றுவதாக தின இதழ்களில் செய்திகள் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

**திருமதி. சபிதா அருண்குமார்**

சிறுவர் பகுதி...


R.P. Evalyn Reeba

# COLOUR THE PICTURE





R.P.Evalyn Reeba



## 2026 ஆராதனை ஒழுங்குகள்

இடம்: Hall No. 10 - Union Church

**ஞாயிறு ஆராதனை**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 6:30 மணி

**தூய நற்கருணை ஆராதனை**
மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**உபவாச ஜெபக் கூடுகை**
மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை
காலை 11:00 மணி

**வீட்டு ஜெபக் கூடுகை**
மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை
இரவு 7:00 மணி

**துதி ஆராதனை**
மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**பாடல் ஆராதனை**
மாதத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**திருமறைப் பள்ளி வகுப்பு**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 7:00 மணி

**பெண்கள் ஐக்கிய சங்கம்**
இரண்டு மற்றும் நான்காம்
ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி

**பாடகர் குழு பயிற்சி**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணி

**ஜெப கூடுகை**
ஒவ்வொரு புதன்கிழமையும்
இரவு 8:00 மணி


SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576